# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 10 | விவசாயமும் தொழிநுட்பவியலும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................................

### பகுதி I

**∗ சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. விவசாய நீர்ப்பாசன திட்டங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக மின்னேரியத் தெய்வம் என அழைக்கப்பட்டவர்.

    1. பராக்கிரமபாகு 2. வசபன் 3. மகாசேனன் 4. தாதுசேனன்

02. ஒரு குளத்திலிருந்து வெளியேறும் மேலதிக நீர் அதற்கு அடுத்துள்ள குளத்தில் சேமிக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்ட தொகுதி.

    1. விழுதொடர் முறைமை 2. புற நெகும
    3. கலிங்கதொட்டி 4. வெல் - வயல்

03. சிறு ஏற்றுமதிப்பயிர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி

    1. கரட், கோவா, லிக்ஸ் 2. ஏலக்காய், கொக்கோ, மிளகு
    3. அன்னாசி, றம்புட்டான், மரமுந்திரிகை 4. சிங்கோனா, இறப்பர், கோப்பி

04. இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது.

    1. லுனுவில 2. அவலத்தை 3. மகா இலுப்பளம 4. தலவாக்கலை

05. இலங்கையின் மொத்தத்தேசிய உற்பத்தியில் பின்வருவனவற்றில் அதிகளவு செல்வாக்குச் செலுத்தும் துறை எது?

    1. விவசாயத்துறை 2. கைத்தொழில்துறை
    3. சேவைத்துறை 4. மீன்வளர்ப்பு

06. இலங்கையில் தற்பொழுது தன்னிறைவு மட்டத்தை அடைந்துள்ள இரண்டு பயிர்களும் எவை.

    1. தேயிலை, இறப்பர் 2. நெல், தென்னை
    3. கரும்பு, கோதுமை 4. கரும்பு, வாழை

07. குறித்த பிரதேசமொன்றில் குறுகிய காலப்பகுதியில் மண்டலத்தில் நிலவும் தன்மை வானிலை எனப்படும். இங்கு குறுகிய காலப்பகுதியில் என கூறப்படும் காலம்.

    1. ஒரு மாதம் 2. ஒரு நாள் 3. ஒரு வருடம் 4. இருவருடம்

08. சாரீரப்பதனை அளவிடப்பயன்படும் உபகரணங்கள் யாது?

    1. வளிமண்டல வெப்பமானி 2. சாதாரண வெப்பமானி
    3. ஈரமானி 4. உயர்வு இழிவு வெப்பமானி

09. ஒளிக்கால அளவை அளவிடப்பயன்படும் உபகரணம் எது?

    1. ஞாயிற்று கதிர்ப்பு மானி 2. ஞாயிறு ஒளிர்வுமானி
    3. ஒளிச்செறிவு மானி 4. ஒளிஉணரி

10. ஒளிச் செறிவை அளவிடப் பயன்படும் அலகு எது.

1. kWhr  2. mmHg  3. Lux  4. Km/hr

11. நுவரெலியா பகுதியில் நிலவும் வருடாந்த மழைவீழ்ச்சி அளவை mm சரியாக வகைக்குறிப்பது.

1. 2500mm இற்கு கூடியது  2. 2000 25000mm

3. 1500 – 2000mm  4. 1000 – 1500m

12. வடக்கு கிழக்கு பருவப்பெயர்ச்சி மழை கிடைக்கும் காலங்கள் எவை?

1. மார்ச் - ஏப்ரல்  2. மே - செப்ரெம்பர்

3. ஒக்டோபர், நவம்பர்  4. டிசம்பர் -

13. பின்வருவனவற்றுள் அதிகளவு வளிமண்டல வெப்பநிலையை காட்டும் காலநிலை வலயம் எது?

1. WL  2. IL  3. WU  4. DL

14. பயிர்ச்செய்கையில் வெப்பநிலையின் சாதகமான செல்வாக்கு அல்லாதது.

1. மண்ணங்கிகளின் தொழிற்பாடு அதிகரிக்கும்
2. ஆவியுயிர்ப்பு அதிகரிக்கும்
3. தண்டுதுண்டங்களில் வேர்விடுவதற்கான அதிக வெப்பநிலை உகந்தது
4. வித்து முளைத்தலுக்கு சற்று அதிகமான மண் வெப்பநிலை சிறந்தது

15. வெவ்வேறு பிரதேசங்களில் சூழல் வெப்பநிலை மாறுபட்டதாகும் இவ்வாறு வேறுபடக் காரணம் அல்லாதது.

1. குத்துயரம்  2. தாவரக்குடித்தொகை

3. புவியின் சாய்வு கோலம்  4. கடல்மட்டத்திலிருந்து மட்டத்திலிருந்து தூரம்

16. பூக்கள் உருவாவதில் ஒளிக்கால அளவு செல்வாக்குச் செலுத்தாத தாவரக்கூட்டம்.

1. கரும்பு, கோப்பி, பயறு  2. தென்னை, தக்காளி, மிளகாய்

3. கரட், வெங்காயம், பீற்றூட்  4. கலாது, லீக்ஸ், ஸ்ரோரி

17. மத்திய நாட்டு ஈர வலையத்தை சரியாக வகைக் குறிக்கும் எழுத்து.

1. WM  2. IU  3. WU  4. IM

18. விவசாய சூழலில் வலையங்களாக வகைப்படுத்துவதுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி.

1. நிலப்பயன்பாடு  2. தாவரக்குடித்தொகை

3. விவசாய நில அளவு  4. மட்காப்பு நடவடிக்கை

19. மண் பக்கப் பார்வை தொடர்பான கூற்றுகளில் தவறானது

1. முதிர்ந்த மண்ணில் தெளிவாக வேறுபடுத்தக்கூடிய ஐந்து வலையங்கள் காணப்படும்.
2. B படையில் A யிலிருந்து கழுவியெடுத்து பதார்த்தங்கள் சேகரிப்பதால் கொள்ளும்பாடை எனப்படும்.
3. R படையில் தாய்ப்பாறைப்பொருள் காணப்படும்
4. கீழ் படையிலிருந்து மேல்நோக்கி மண் உருவாக்கச் செய்யும் முறை நடைபெறும்

20. மண் துணிக்கைகளுடன் மெல்லியதாக சுற்றி இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட மண்ணீர் எவ்வாறு அழைக்கப்படும்.

1. வயற்கொள்ளளவு 2. புவியீர்ப்புநீர் 3. மயிர்த்துளைநீர் 4. பருகு நீர்

21. களிக்கனிப்பொருளின் துணிக்கைகளின் அளவு விட்டம் சரியாக வகைக்குறிப்பது.

1. 2mm இலும் கூடியது
2. 0.002mm இலும் குறைவான விட்டம்
3. 0.2mm – 0.02mm இடைவிட்ட விட்டம்
4. 0.02 – 0.002 இற்கு இடைப்பட்ட விட்டம்

22. மண்ணீரின் அளவு நிலை படத்தில் காட்டப்பட்டுள்ளது.

| பருகு நீர் | மயிர்த்துளை நீர் | புவியீர்ப்பு |
|---|---|---|

x

x புள்ளி மூலம் வகைக்குறிப்பிடுவது.

1. நிரந்தர வாடற்புள்ளி
2. நிரம்பல்நிலை
3. தற்காலிக வாடற்புள்ளி
4. வயற்கொள்ளளவு

23. உருவிற் காட்டப்படும் மண்கட்டமைப்பு யாது?



1. மணியுரு 2. குற்றியுரு
3. தட்டுரு 4. நிரலுரு

24. ஈரக்குமிழ் வெப்பமானி வாசிப்பு – $28^0C$ உலர்குமிழ் வெப்பமானி வாசிப்பு – $30^0C$ எனின் அட்டவணையைப் பயன்படுத்தி சாரீரப்பதன் துணிக.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 88% | 77 | 66 | 56 | 45 | 35 | 26 | 16 | 7 | - |
| 11 | 89 | 78 | 67 | 57 | 47 | 38 | 28 | 19 | 11 | [illegible] |
| 12 | 89 | 79 | 68 | 59 | 49 | 40 | 31 | 22 | 14 | [illegible] |
| 13 | 89 | 79 | 69 | 60 | 51 | 42 | 33 | 25 | 16 | [illegible] |
| 14 | 90 | 80 | 70 | 61 | 52 | 43 | 35 | 27 | 19 | 1 |
| 15 | 90 | 80 | 71 | 62 | 54 | 45 | 37 | 29 | 22 | 1 |
| 16 | 90 | 81 | 72 | 63 | 55 | 47 | 39 | 31 | 24 | 1 |
| 17 | 91 | 82 | 73 | 64 | 56 | 48 | 41 | 33 | 26 | 1 |
| 18 | 91 | 82 | 73 | 65 | 57 | 50 | 42 | 35 | 28 | 2 |
| 19 | 91 | 82 | 74 | 66 | 58 | 51 | 44 | 37 | 30 | 2 |
| 20 | 91 | 83 | 75 | 67 | 59 | 52 | 45 | 38 | 32 | 2 |
| 21 | 91 | 83 | 75 | 68 | 60 | 53 | 47 | 40 | 34 | 2 |
| 22 | 92 | 84 | 76 | 69 | 61 | 54 | 48 | 41 | 35 | 2 |
| 23 | 92 | 84 | 77 | 69 | 62 | 56 | 49 | 43 | 37 | 3 |
| 24 | 92 | 84 | 77 | 70 | 63 | 57 | 50 | 44 | 38 | 3 |
| 25 | 92 | 85 | 77 | 71 | 64 | 57 | 51 | 45 | 40 | 3 |
| 26 | 92 | 85 | 78 | 71 | 65 | 58 | 52 | 46 | 41 | 3 |
| 27 | 93 | 85 | 78 | 72 | 65 | 59 | 53 | 47 | 42 | 3 |
| 28 | 93 | 86 | 79 | 72 | 66 | 60 | 54 | 49 | 43 | 3 |
| 29 | 93 | 86 | 79 | 73 | 67 | 61 | 55 | 50 | 44 | 3 |
| 30 | 93 | 86 | 80 | 73 | 67 | 61 | 56 | 50 | 45 | 4 |
| 31 | 93 | 86 | 80 | 74 | 68 | 62 | 57 | 51 | 46 | 4 |

1. 89% 2. 85%
3. 86% 4. 87%

25. பின்வருவனவற்றில் உருமாறியபாறைவகை அல்லாதது எது.

1. மணற்கல் 2. வேல் 3. நைஸ் 4. சலவைக்கல்

26. மண்ணிலுள்ள மணல், அடையல், களி கூறுகளில் சார்பு பரம்பல் வீதத்தை சிறப்பாக விபரிப்பது.


1. மண் கட்டமைப்பு
2. மண் இழையமைப்பு
3. மண்தாக்கம்
4. கற்றயன் பரிமாற்றக்கொள்ளளவு

27. டொலமைற்று அல்லது பெல்ஸ்டார் அதிகம் கொண்ட மண் என்ன நிறமாக காணப்படும்.

1. கறுப்பு  2. சாம்பல்  3. கடும் கபிலம்  4. செந் நிறம்

28. பயிர் செய்நிலத்தை ஒரே ஆழத்தில் உழுவதால் மண்ணில் ஏற்படும் மாற்றம்.

1. மண் $P^H$ அதிகரிக்கும்
2. மண் இறுக்கமடைதல்
3. மண் உவர் தன்மை அடைதல்
4. மண்ணரிப்பு


29. 


படம் மூலம் காட்டப்படும் மண்ணின் இயல்பு.

1. மண் $P^H$  2. கற்றயன் பரிமாற்றக்கொள்ளளவு
3. மண் தாக்கம்  4. மண் மின்கடத்துதிறன்

30. யாழ்ப்பாண வலையத்தில் அதிகளவில் காணப்படும் மண் தொகுதி

1. செம்மஞ்சட் பொட்சோல்  2. அலூவியல் மண்
3. வண்டல்மண்  4. செங்கபில மண்

31. 

உருவில் காட்டப்படும் மண் இழையமைப்பைசரியாக வகைக்குறிப்பது.

1. களிமண்  2. மணல் மண்
3. மணல் இருவாட்டி மண்  4. களி இருவாட்டி மண்

32. கொத்திதிப்புரட்டுவதன் மூலம் மண்ணின் மாற்றக்கூடிய இயல்பு அல்லாதது.

1. இழையமைப்பு  2. கட்டமைப்பு
3. நுண்துளை இடைவழி  4. கற்றயன் பரிமாற்றக்கொளளவு

33. 

படத்தில் காட்டப்படும் மண்ணரிப்பு வகையை சரியாகப் பெயரிடுவது.

1. சிதறல் அரிமானம்  2. பரப்பரிமானம்
3. ஓடுகால் அரிமானம்  4. சிற்றோடை அரிமானம்

34. மண் வளங்குன்றுவதற்கான பிரதான காரணம் அல்லாதது.

1. மண் இறுக்கமடைதல்  2. மண் தாக்கம்
3. மண்ணரிப்பு  4. மட்காப்பு

35. உருவில் காட்டப்படும் மட்காப்பு முறை.



1. சமஉயரக்கோட்டு பயிர் செய்தல்
2. படிமுறை பயிர்செய்கை
3. புல்வேலிமுறை
4. இருவேலிமுறை

36. பயிர்செய்கைக்கு பொருத்தமான நிலத்தில் காணப்படும் மண்ணீர் மண் வளி அளவை சதவீதத்தில் சரியாகத்தருவது.

1. 45%, 25%  2. 5%, 25%  3. 25%, 25%  4. 45%, 5%

37. பின்வருவனவற்றுள் மண்ணின் பௌதிக இயல்பு அல்லாதது.

1. இழையமைப்பு   2. மண்தாக்கம்   3. மண்ணிறம்   4. கட்டமைப்பு

38. மண்ணில் பொதுவாக காணப்படும் நுண்ணங்கிகள் அடங்கிய கூட்டம் எது.

1. அல்காக்கள் நெமட்றோட்டுகள் புரட்ரோசோவன்கள்
2. பற்றீரியாக்கள், பங்கசுகள், மொலஸ்காக்கள்
3. அட்டைகள், பங்கசுகள், தாவரவேர்
4. கறையான், பஞ்சனம், மொலஸ்காக்கள்

39. உருவில் காட்டப்படும் உபகரணத்தை பயன்படுத்தி பெறப்படும் காலநிலைக் காரணி

1. மழைவீழ்ச்சி
2. ஒளிச்செறிவு
3. உயர்வு இழிவு வெப்பநிலை
4. ஒளிக்காவுகை



40. இலங்கை காணப்படும் விவசாய சூழலில் வலயங்களின் எண்ணிக்கை.

1. 26   2. 36   3. 46   4. 56

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

(01) பயிர்ச்செய்கையில் உயர்வான விளைச்சலைப் பெற காலநிலை காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

01. உணவுக்காப்பில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று விடயங்கள் தருக.
02. பயிர்ச்செய்கையில் சாரீரப்பதன் சாதமாக செல்வாக்கு மூன்று தருக.
03. சுய பதிவு செய்யும் மழை மானியின் விசேட பயன் 1 தருக.
04. ஒளிக்கால அளவில் செல்வாக்கிற்கு அமைய தாவரத்தை வகைப்படுத்துக.
05. வளிமண்டல வெப்பநிலை அளவீட்டிற்காக வெப்பமானியை ஸ்தாவிக்க வேண்டிய முறை எது?
06. மண் அமிலத்தன்மையடைய காரணமான செயற்பாடுகள் மூன்று தருக.
07. காரத்தன்மையடைந்த மண்ணை நடுநிலைப்படுத்த சேர்க்கவேண்டிய பதார்த்தம் 2 தருக.
08. மண் கட்டமைப்பு வகைகள் இரண்டு பெயரிடுக.
09. மண்ணரிப்பை குறைக்கப்பயன்படும் இரு முறைகள் தருக.

(3 + 3 + 1 + 3 + 1 + 3 + 2 + 2 + 2 = 20 புள்ளிகள்)

(02) முற்காலத்தில் விவசாயம் தன்னிறைவு பெற்ற நாடாக இலங்கை தற்போது வீழ்ச்சி கண்டுள்ளது.

a. 1. இலங்கையில் விவசாயம் மேற்கொள்ள கூடியதான சாதகமான காரணிகள் இரண்டு தருக.
   2. விவசாயத்தின் பிரதான பிரிவுகள் என்ற 3 பெயரிடுக

b. 1. பல்நோக்கு அபிவிருத்தித்திட்டத்தின் நோக்கங்கள் 2 தருக.
   2. விவசாயத்துறையை முன்னேற்ற மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 3 தருக.

(2 + 3 + 2 + 3= 10 புள்ளிகள்)

(03) பயிர்ச்செய்கையில் வானிலைக்காரணிகள் செல்வாக்கு பெரும் பங்காற்றுகின்றது.

a. 1. பிரதான காலநிலைக் காரணிகள் 3 பெயரிடுக."

2. பயிர்ச்செய்கையில் மழை வீழ்ச்சியின் முக்கியத்துவம் 2 தருக

b. 1. இலங்கைக்கு மழை கிடைக்கும் வழிமுறைகள் 3 பெயரிடுக.

2. பெரும்போகம், சிறுபோக காலங்களை வகைக்குறிக்குக.

(2 + 3 + 2 + 3= 10 புள்ளிகள்)

(04) இலங்கையில் ஒத்த இயல்புடைய பகுதிகள் ஒன்றாகக்கப்பட்டு சூழலில் வலயமாக வரையறுக்கப்படுகின்றது.

a. 1. பிரதான காலநிலை வலயங்கள் 3 பெயரிடுக.

2. விவசாய சூழலில் வலய வகைப்பாட்டின் முக்கியத்துவம் 2 குறிப்பிடுக.

b. 1. பின்வரும் காலநிலை வலயங்கள் பெயரிட்டுக் காட்டுக.

மத்திய நாட்டு இடைவலயம்

மலைநாட்டு ஈரவலயம் காலநிலை

2. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் 3 தருக.

(2 + 3 + 2 + 3= 10 புள்ளிகள்)

(05) மண்ணின் பௌதிக, இரசாயன, உயிரியல் இயல்புகளின் மேம்பட்ட நிலை பயிர் செய்கைக்கு பொருத்தமானதாகும்.

a. 1. மண்ணின் இரசாயன இயல்பு 2 தருக.

2. மண்நிறம் பற்றிய கற்கை சிறப்பான பயிர்ச் செய்கை உதவும் வழிகள் 2 குறிப்பிடுக.

b. 1. மண்ணின் கூறுகள் நான்கையும் தருக.

2. பயிர்ச்செய்கையில் மண்சேதனப் பொருளின் முக்கியத்துவம் 2 தருக.

(2 + 3 + 2 + 3= 10 புள்ளிகள்)

(06) தாவரவேர்களுக்கு மண் இன்றியமையாத ஊடகமாக கருதப்படுகின்றது.

a. 1. மண் உருவாதல் வழிமுறையை வரைபடம் மூலம் காட்டு.

2. பாறைகள் வகைகளை தந்து அவை ஒவ்வொன்றிக்கு உதாரணம் ஒவ்வொன்றும் தருக.

3. பௌதிக வானிலையழிதல் காரணிகள் மூன்று தருக.

(07) முறையற்ற விவசாய நடவடிக்கைகளினால் மண்ணின் உற்பத்தித்திறன் குறைவடைகின்றது.

a. 1. மேற்குறிப்பிட்ட வகையிலான முறையற்ற விவசாய நடவடிக்கைகள் இரண்டை சுட்டிக்காட்டுக

2. இறுக்கமடையும் சந்தர்ப்பங்கள் 2 குறிப்பிடுக

b. 1 மண்ணரிப்பின் 3 படிகளும் எவை?

2. மண்ணரிப்பைத் தடுக்க பயன்படுத்தக்கூடிய வகையில் 3 குறிப்பிடுக.

(2 + 3 + 2 + 3= 10 புள்ளிகள்)